மாண்புமிகு பேரவைத் தலைவர்: மணி, பால் சுவையானது என்று சொல்லுங்கள். அறுசுவை அல்ல.

திரு. ஜி.கே. மணி: அறுசுவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறுசுவை என்றால் ஆறு சுவை இருக்க வேண்டும்! *(சிரிப்பு).*

திரு. ஜி.கே. மணி: இல்லை, இல்லை. எல்லாச் சத்துக்களையும் உள்ளடக்கிய இந்தப் பால் சத்தான உணவு. ஆகவே, ஆவின் பால் விற்பனை நிலையம் துவங்கக்கூடிய நம்முடைய அரசு - அந்தப் பகுதி விவசாயிகள் முழுக்க முழுக்க நிரம்பி இருக்கின்ற பகுதி; வானம் பார்த்த பூமியைக் கொண்ட விவசாயிகள்; விவசாயிகள், சார்புத் தொழிலாக கறவை மாடுகளை அதிகமாக வளர்த்து வருகிறார்கள். ஆகவே, விவசாயிகளுடைய அந்தப் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு பாலை விற்பனை செய்வதற்கு, மேலும் பதப்படுத்துவதற்கு அங்கே பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு நிலையம் ஒன்று துவங்க அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் விற்பனை நிலையம் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர், பால் கூட்டுறவுச் சங்கம் கேட்கிறாரா? இல்லை, வேறு என்ன என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டால், அதற்கு உரிய பதிலைத் தருகிறேன்.

முற்பகல் 10-25

திரு. ஜி. கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் தரப்பிலே அமைச்சர் அவர்கள், பால் விற்பனை நிலையம் தொடங்கப்பட உள்ளது என்று சொல்லியிருக்கிறார். இதனைத் தொடங்கக்கூடிய அரசு, பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே வெறும் 4,800 லிட்டர் பால் மட்டுமே உற்பத்தி செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. தேவையானால் ஒரு பால் குளிர்வு இயந்திரம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2004 நவம்பர் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ.கு.சி. அன்பழகன்.

திரு. ஆ.கு.சி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எவ்வளவு எண்ணிக்கையில் ஆவின் பால் விற்பனை நிலையங்கள் உள்ளன? அதிலே குறிப்பாக தனியார் பால் விற்பனை நிலையங்களைப் போட்டியாக எடுத்துக்கொண்டு, நமது அரசு பால் விற்பனை நிலையங்களை அதிகப்படுத்தியும், கொஞ்சம் விலை குறைப்பு ஏற்பாடு செய்தும், அதிக அளவிலே பால் விநியோகம் செய்ய அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிக் கேள்வி போடவும். வினா எண் 26, திரு. எஸ்.ஏ.எம். உசேன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

26—

உலமா ஓய்வூதியம்

*** 36048—திரு. எஸ்.ஏ.எம். உசேன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலமா ஓய்வூதியத்தை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) உலமா ஓய்வூதியத்தை அதிகரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

திரு. எஸ்.ஏ.எம். உசேன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலமாக்கள் ஓய்வூதியம் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் 400 ரூபாயாக இருந்தது, தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் அது 500 ரூபாயாக உயர்த்தப்பட்டது. எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த காலத்தில் இரண்டாயிரம் உலமாக்களுக்கு

ஓய்வூதியம் வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு, தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் அது ரூ.2,200 ஆக உயர்த்தப்பட்டது. அந்த அடிப்படையில், 19-7-2000 அன்று, உலமாக்கள் மட்டுமல்லாமல் தர்காக்களில் பணியாற்றக்கூடிய முஅத்தினார்களுக்கும் அந்த உதவி நீட்டிக்கப்பட்டது. இன்றைக்கு உலமாக்கள் மொத்தம் 10 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களாக இருப்பதாக உலமாக்கள் சபை தெரிவித்திருக்கின்றது. குறைந்த அளவுதான் இருக்கின்றார்கள் என்ற காரணத்தினால், பல கோடி மக்கள் வாழக்கூடிய பகுதிகளில் உலமாக்கள் என்று இருக்கக்கூடியவர்களுக்கு ஒரு மரியாதை அளிக்கக்கூடிய வகையில் அவர்களுக்கு மேலும் ஊதியத்தை உயர்த்தித் தர வேண்டும். அதற்கான முயற்சியை அரசு எடுக்குமா என்று தங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. அண்ணாவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 60 வயது நிரம்பிய, 20 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வுபெற்ற வறிய நிலையிலுள்ள உலமாக்கள் ஓய்வூதியம் பெற தகுதி உடையவர்கள். மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய் வழங்கப்படுகிறது. 250 ரூபாயாக இருந்த ஓய்வூதியத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 400 ரூபாயாக உயர்த்தித் தந்துள்ளார்கள். உலமா ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்த 2004-2005 ஆம் ஆண்டுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, ரூபாய் 120 இலட்சம் ஒதுக்கியுள்ளது. ஜூலை 2004 வரை 1,545 உலமாக்கள் இத்திட்டத்தின்மூலம் பயன்பெற்று வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று அரசின் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஏ.எம். உசேன்.

திரு. எஸ்.ஏ.எம். உசேன்: பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் இருப்பதே 10 ஆயிரம் பேர்தான். அவர்களுக்கு—அதை மேலும் கொஞ்சம் அதிகமாகக் கொடுப்பதன்மூலமாக வறிய நிலையில் இருக்கக்கூடிய உலமாக்கள் பயன்பெறுவார்கள். ஆகவே, மீண்டும் நான் வலியுறுத்தி வேண்டுகிறேன். அவர்களை—அதிக அளவில் நீங்கள் எண்ணிக்கையை--சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

2004 நவம்பர் 18]

10 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். குறைந்தது 5 ஆயிரம் பேரையாவது சேர்த்துக்கொள்ள வேண்டும் அல்லது ஆண்டுக்கு ஆயிரம் பேர் என்ற அளவிற்கு நீங்கள் அதிகப்படுத்தித் தந்தால் குறுகிய காலத்திலே அவர்கள் மொத்த பேருக்கும் ஊதியம் கிடைக்கக்கூடிய நிலை ஏற்படும். எனவே, அன்புகூர்ந்து நீங்கள் இந்தக் கோரிக்கையை ஏற்றுச் செயல்படுத்த வேண்டுமென்று தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. அண்ணாவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலமா ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வுபெற அரசு அனுமதித்துள்ள பயனாளிகளின் எண்ணிக்கை 2,200. இந்த 2,200-ல் ஜூலை மாதம் வரை 1,545 உலமாக்கள்தான் இத்திட்டத்தின்மூலம் பயன்பெற்று வருகிறார்கள். மேலும், உலமா ஓய்வூதியம் வழங்க அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ள மனுக்களின் எண்ணிக்கை 178. இவ்வளவு விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன. இதை ஆய்வு செய்து அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்கப்படும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்.

திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணியமிக்க நலிவுற்ற உலமா பெருமக்களுக்கு ஓய்வூதியம் என்பது மறைந்த பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வராக இருந்தபோது மாதம் 250 ரூபாய் ஓய்வூதியமாகத் தந்து அவர்களுக்குப் பேருதவியைச் செய்தார்கள். அதன்பிறகு, அனைத்துத் தரப்பினரின் நம்பிக்கை நட்சத்திரம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதை 400 ஆகவும், 500 ஆகவும் உயர்த்தி கிட்டத்தட்ட 1,825 நலிவுற்ற உலமா பெருமக்களுக்கு, அவர்கள் மனதார நன்றி செலுத்தும்வண்ணம் பேருதவி புரிந்து வருகிறார்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு சிறுபான்மை இஸ்லாமிய மக்களின் சார்பாக என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 20 ஆண்டு காலம் உழைத்து ஓய்வுபெறும் நலிவுற்ற உலமா பெருமக்கள், இன்றைய மத்திய அரசால் சமையல் எரிவாயு முதற்கொண்டு செய்யப்பட்ட விலையேற்றத்தால் மிகவும் சிரமப்படும் நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, சிறுபான்மை மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, நலிவுற்ற உலமா பெருமக்களின் ஓய்வூதியத்தை உயர்த்தித் தர முன்வருமா என த்ங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.